Previous Date of examination :

DEPOSITION OF THE WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
TIRUVARUR.

## STC. No.1049/2019

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of witness for | : | **DW1** | Caste | : | |
| Name | : | சதீஷ் | Age | : | 41/2026 |
| Father's Name | : | கணேஷ் | Occupation | : | டிரைவர் |
| Village | : | திருவாரூர் | Taluk | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the **02nd day of February 2026.**

**முதல் விசாரணை** :

நான் தற்போது திருவாரூரில் வசித்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். நீதிமன்றத்திலிருந்து சம்மன் வந்த பிறகுதான் என் மீது காசோலை மோசடி வழக்கு தொடரப்பட்டது எனக்கு தெரியும். சாந்தகுமார் என்பவரை எனக்கு தெரியாது. 19.04.2018 ம் தேதி சாந்தகுமார் என்னிடம் கை கடிதம் கொடுத்து ரூ.4,50,000/- பணம் கடனாக பெற்றதாக சொல்லப்பட்டுள்ளது. எனக்கு விபத்து ஏற்பட்டதாக சொல்லி நான் கேட்டதாக சொல்லப்பட்டுள்ளது. 21.06.2018 ம் தேதி அன்றுதான் எனக்கு சென்னை போய் திருவாரூர் திரும்பும் போதுதான் விபத்து ஏற்பட்டது. அதற்கான முதல் தகவல் அறிக்கை சான்றிட்ட நகல் எனது தரப்பில் ஆவணமாக தாக்கல் செய்யப்படுகிறது. அது **எ.ம.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

அந்த விபத்தின் விளைவாக இரண்டு கால்களிலும் எலும்பு முறிவு ஏற்பட்டு பிளேட் பொருத்தப்பட்டுள்ளது. 1 1/2 வருடங்களுக்கு மேலாக வீட்டில் உள்ளவர்களின் உதவியுடன்தான் அனைத்து வேலையும் செய்யமுடியும். அந்த விபத்தில் ஏற்பட்ட காயத்திற்கான Disablity Certificate சான்றிட்ட நகல் எ.ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.04.2019 ம் தேதி நேரில் சாந்தகுமாரை பார்த்து கைகடிதத்தை பெற்றுக்கொண்டு காசோலையை கொடுத்ததாக சொல்லப்பட்டுள்ளது. அது முற்றிலும் பொய்யான தகவலாகும். நான் நடக்க இயலாத சூழ்நிலையில் நான் நேரில் சந்திந்து காசோலை கொடுத்தேன் என்ற விபரம் பொய்யான ஒன்றாகும்.

ரேணுகா என்பவர் மகளிர் சுய உதவி குழு நடத்தி வந்தார்கள். அந்த குழுவில் என்னுடைய அம்மா இருந்தார். அவர்களுக்காக எனது காசோலையை Guaranty purpose ஆக கொடுத்து வைத்திருந்தேன். அந்த காசோலை எவ்வாறு சாந்தகுமாரிடம் சென்றது என்று எனக்கு தெரியாது. அந்த குழுவில் சிந்தனை செல்வி, சாந்தநாயகி

மற்றும் எனது அம்மா ஆகியோர்கள் இருந்தார்கள். வேறு சில நபர்களும் இருந்தார்கள். காசோலை கரூர் வைசியா வங்கியை சேர்ந்ததாகும். காசோலை எண். 000101 என்ற காசோலையை எனது அம்மாவிடம்தான் கொடுத்தேன். வேறு எதற்காகவும், யாரிடமும் அதை கொடுக்கவில்லை. எனது வழக்கிற்கு பிறகுதான் வேறு நபர்கள் மீதும் வழக்கு தொடரப்பட்ட விபரம் தெரியவந்தது. இந்த வழக்கு முற்றிலும் பொய்யான வழக்கு ஆகும். காசோலையில் கையெழுத்து மற்றும் தொகை நிரப்பபடாமல் வெற்று காசோலையாகதான் எனது அம்மாவிடம் கொடுத்தேன்.

<u>**புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**</u> : இல்லை.

<u>**மறு விசாரணை**</u> : இல்லை.

**சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஏற்கப்பட்டது.**

**ஒம்/- G. லிசி.,**
**நீதித்துறை நடுவர்,**
**திருவாரூர்.**